தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

# செய்தி மடல்

செய்தி 16 மடல் 8 ஆகஸ்ட் – 2016 ₹1.00

## இளநிலைப் பட்டப்படிப்பில் மாணவர் சேர்க்கைக்கான கலந்தாய்வு



தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் அளிக்கும் பி.வி.எஸ்சி. மற்றும் ஏ.எச் பட்டப் படிப்பிற்கான கலந்தாய்வு 13.07.2016 மற்றும் 14.07.2016 ஆம் தேதிகளிலும், பி.டெக். (உணவுத் தொழில்நுட்பம்), பி.டெக். (கோழியின உற்பத்தித் தொழில்நுட்பம்) மற்றும் பி.டெக்.(பால்வளத் தொழில்நுட்பம்) பட்டப் படிப்புகளுக்கான கலந்தாய்வு 15.07.2016ஆம் தேதியும் நடைபெற்றன. மாண்புமிகு தமிழகக் கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி அவர்கள் கலந்தாய்வில் பங்கேற்று, தேர்வுசெய்யப்பட்டவர்களுக்குச் சேர்க்கைக்கான அனுமதிக் கடிதம் வழங்கி, வாழ்த்திப் பேசினார். நிகழ்ச்சிக்குப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் தலைமை வகித்தார். முன்னதாக, மாணவர் சேர்க்கைக் குழுத் தலைவர் மற்றும் பல்கலைக்கழகப் பதிவாளர் (பொ.) மற்றும் தேர்வாணையர் முனைவர் சி. பாலசுப்பிரமணியன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்.

## கால்நடைப் பராமரிப்புத் துறைச் செயலர் வருகை



தமிழ் நாடு அரசின் கால்நடைப் பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன் வளத் துறைச் செயலர் திரு. ககன்தீப் சிங் பேடி இ.ஆ.ப. அவர்கள் 19.07.2016அன்று ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கற்பித்தல் கால்நடைச் சிகிச்சை வளாகம், ஆய்வகங்கள் மற்றும் வகுப்பறைகளைப் பார்வையிட்டார். இந்நிகழ்வில் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் மருத்துவர் ந. சுப்பையன் இ.ஆ.ப. அவர்கள் உடனிருந்தார்.

## உணவுப் பரிசோதனை ஆய்வக ஆய்வு

மத்திய அரசின் உணவுப் பதப்படுத்தல் தொழில்கள் அமைச்சகத்தின் நிதியுதவியில் இறைச்சி மற்றும் இறைச்சிப் பொருட்களுக்கான உணவுப் பரிசோதனை ஆய்வகம், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை உற்பத்திப் பொருட்கள் தொழில்நுட்பத் (இறைச்சி அறிவியல்) துறையில் நிறுவப்பட்டுள்ளது. இவ்வாய்வகத்தை 30.07.2016 அன்று மத்திய அரசின் உணவுப் பதப்படுத்தல் தொழில்கள் அமைச்சகத்தின் இணைச் செயலர் செல்வி அனுராதா பிரசாத் மற்றும் விற்பனை அதிகாரி டாக்டர் கே.கே. அரவிந்தன் ஆகியோர் பார்வையிட்டு, ஆய்வுசெய்தனர். சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் முதல்வர் முனைவர் சி. பாலச்சந்திரன், கால்நடை உற்பத்திப் பொருட்கள் தொழில்நுட்பத் (இறைச்சி அறிவியல்) துறையின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ராபின்சன் ஜெ.ஜெ. ஆப்ரகாம் மற்றும் ஆசிரியர்கள் இந்நிகழ்வில் உடனிருந்தனர்.



## பன்னாட்டுப் பயிலரங்கு



“நீடித்த கால்நடை உற்பத்தி – நோய் கண்டறிதலில் நவீனப் போக்குகள் மற்றும் எதிர்காலச் சவால்கள்” குறித்த பன்னாட்டுப் பயிலரங்கு, சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் 11.07.2016முதல் 13.07.2016வரை நடைபெற்றது. இந்தப் பயிலரங்கு, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், இங்கிலாந்தின் நாட்டிங்ஹாம் பல்கலைக்கழகம் மற்றும் அமெரிக்காவின் பென்ஸ்டேட் பல்கலைக்கழகம் ஆகியவை இணைந்து செயலாற்றுகிற மும்முனைத் திட்டமான இங்கிலாந்து – இந்தியக் கல்வி மற்றும் ஆராய்ச்சித் துவக்கத் திட்டம் மற்றும் இங்கிலாந்தின் நாட்டிங்ஹாம் பல்கலைக்கழகத் திட்டத்தின்கீழ் நடத்தப்பட்டது. விரிவுரைகள் மற்றும் செய்முறைப் பயிற்சி இடம்பெற்ற இப் பயிலரங்கில் இந்தியா முழுவதிலும் இருந்து முதுநிலைப் பட்ட மாணவர்கள், முனைவர் பட்ட ஆய்வாளர்கள் மற்றும் இளம் பேராசிரியர்கள் என 20 பேர் பங்கேற்றனர். நாட்டிங்ஹாம் பல்கலைக்கழகத்தின் டாக்டர் ஜானெட் டாலே, பென்ஸ்டேட் பல்கலைக்கழகத்தின் டாக்டர் சுரேஷ் வர்மா குச்சுபுடி, டாக்டர் பூஷன் ஜெயராவ் மற்றும் டாக்டர் விவேக் கபூர், கென்ட் பல்கலைக்கழகத்தின் டாக்டர் நைஜெல் டெம்பர்டன், இங்கிலாந்தின் வெஸ்ட்மின்ஸ்டர் பல்கலைக்கழகத்தின் டாக்டர் எட்வர்டு ரைட் ஆகியோர் பயிலரங்கில் பங்கேற்றனர். பயிலரங்கின் நிறைவு விழாவில் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் பங்கேற்று, பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கி நிறைவுரை ஆற்றினார். பயிலரங்கை அடிப்படை அறிவியல் புல முதல்வர் முனைவர் கா. குமணன், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் சி. பாலசந்திரன், நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் முனைவர் இல. குணசீலன் ஆகியோர் ஒருங்கிணைத்து நடத்தினர்.

## உலக விலங்குவழிப் பரவும் நோய்கள் தினம்



**சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி:** கல்லூரியின் கால்நடை நலப் பொதுச் சுகாதாரம் மற்றும் நோய் நிகழ்வாய்வியல் துறையும், நாட்டு நலப்பணித்திட்டமும் இணைந்து கால்நடை நல முகாமைத் திருவள்ளூர் மாவட்டத்தின் தண்ணீர்குளம் கிராமத்தில் 06.07.2016அன்று நடத்தின. முகாமில், 29 செல்லப் பிராணிகளுக்கு வெறிநோய்த் தடுப்பூசி அளிக்கப்பட்டதுடன், 151 கால்நடைகளுக்குச் சிகிச்சை மற்றும் பண்ணையாளர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. மேலும், விலங்குவழிப் பரவும் நோய் பற்றிய விழிப்புணர்வுக் கையேடுகள் விநியோகிக்கப்பட்டன.

**ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்:** கல்லூரியின் கால்நடை நலப் பொதுச் சுகாதாரம் மற்றும் நோய் நிகழ்வாய்வியல் துறையும், நாட்டு நலப்பணித்திட்டமும் இணைந்து ஏற்பாடுசெய்த வெறிநோய்த்



தடுப்பூசி மற்றும் தனிமனிதச் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வு முகாம் 05.07.2016அன்று நடத்தப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர் க. ந. செல்வகுமார் அவர்கள் முகாமைத் தொடங்கிவைத்தார். முகாமில் 40 தெரு நாய்கள் மற்றும் வீட்டு நாய்களுக்குத் தடுப்பூசி போடப்பட்டது. வெறிநோய்க் கடியைத் தவிர்ப்பதற்கான வழிமுறைகள், நாய் கடித்த காயங்களைக் கையாளும் முறைகள் மற்றும் தனிமனிதச் சுகாதாரம் பற்றிய துண்டுபிரசுரங்கள் செல்லப்பிராணிகள் வளர்ப்போர் மற்றும் பொது மக்களுக்கு வழங்கப்பட்டன.

**திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்:** கல்லூரிமூலம் உலக விலங்குவழிப் பரவும் நோய்கள் தினம் 05.07.2016அன்று கொண்டாடப்பட்டது. திருநெல்வேலி, அரசு மருத்துவக் கல்லூரியின் சமூக மற்றும் தடுப்பு மருத்துவத் துறையின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ஜி. கிருஷ்ண லீலா அவர்கள் சிறப்பு விருந்தினராகப்




பங்கேற்று, “புதிதாகத் தோன்றும் விலங்குவழிப் பரவும் நோய்களின் பொதுச் சுகாதார முக்கியத்துவம்” குறித்துச் சிறப்புரை ஆற்றினார். கல்லூரி முதல்வர் முனைவர் எம். திருநாவுக்கரசு அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்து,

"மனித – விலங்குகளிடையே நோய் அச்சுறுத்தல்" தலைப்பில் பேச்சு, சுவரொட்டி தயாரித்தல் மற்றும் புகைப்படம் எடுத்தல் என நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார்.

## பிரதம மந்திரி பயிர்க் காப்பீட்டுத்திட்ட விழிப்புணர்வு முகாம் மற்றும் விவசாயக் கண்காட்சி



**காட்டுப்பாக்கம், வேளாண்மை அறிவியல் நிலையம்:** காட்டுப்பாக்கம், வேளாண்மை அறிவியல் நிலையத்தின்மூலம் பிரதம மந்திரி பயிர்க் காப்பீட்டுத் திட்டம் பற்றிய விழிப்புணர்வு முகாம் மற்றும் விவசாயக் கண்காட்சி 05.07.2016 அன்று சிங்கபெருமாள் கோவிலில் நடைபெற்றது. காஞ்சிபுரம் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி மரகதம் குமரவேல் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்து, விவசாயக் கண்காட்சியைப் பார்வையிட்டார். பல்கலைக்கழகத்தின் விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் நி.கு. சுதீப்குமார் அவர்கள் சிறப்புரையாற்றினார். மறைமலைநகர் நகராட்சித் தலைவர் திரு. எம்.ஜி.கே. கோபிகண்ணன், கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ஹ. கோபி மற்றும் கால்நடைப் பராமரிப்புத் துறை, வேளாண்மை, வேளாண் வணிகம் மற்றும் தோட்டக்கலை, மாவட்ட முன்னோடி வங்கி மற்றும் காப்பீடு நிறுவனங்களின் அலுவலர்கள் பங்கேற்று உரையாற்றினர். பயிர்க் காப்பீடு குறித்த விரிவுரைக்கும், கலந்துரையாடலுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டது. கண்காட்சியில் இடம்பெற்ற 20 அரங்குகளில் அரசுத் துறைகள் மற்றும் தனியார் நிறுவனங்கள், முன்னோடி விவசாயிகள் மற்றும் சுய உதவிக் குழுவினர் தங்களின் பணிகள் மற்றும் புதிய தொழில்நுட்பங்களைக் காட்சிக்கு வைத்தனர். நிகழ்ச்சிமூலம் 925 விவசாயிகள் பயனடைந்தனர்.

**நாமக்கல், வேளாண்மை அறிவியல் நிலையம்:** நாமக்கல், வேளாண்மை அறிவியல் நிலையத்தின்மூலம் பிரதம மந்திரி பயிர்க் காப்பீட்டுத் திட்டம் பற்றிய விழிப்புணர்வு முகாம் மற்றும் வேளாண் கண்காட்சி 09.07.2016 அன்று நடைபெற்றது. மாண்புமிகு தமிழக மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. பி. தங்கமணி, மாண்புமிகு தமிழக சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் டாக்டர் வி. சரோஜா ஆகியோர் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று விழிப்புணர்வு நிகழ்ச்சி மற்றும் காண்காட்சியைத் துவக்கிவைத்து, விவசாயிகளுக்கு இடுபொருட்கள் வழங்கிச் சிறப்புரை ஆற்றினர். மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர் திரு. பி.ஆர். சுந்தரம் அவர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்று பிரதம மந்திரி பயிர்க் காப்பீட்டுத்



திட்டம் குறித்து விளக்கிப் பேசினார். தமிழகச் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. கே.பி.பி. பாஸ்கர் மற்றும் திரு. சி. சந்திரசேகரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். நாமக்கல் மாவட்ட ஆட்சியர் திரு. வி. தட்சிணாமூர்த்தி இ.ஆ.ப. அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்து உரையாற்றினார். முன்னதாக, பல்கலைக்கழக விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் நி.கு. சுதீப்குமார் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். கால்நடைப் பராமரிப்புத் துறை, வங்கி மற்றும் காப்பீடு துறை சார்ந்த அலுவலர்கள் உரையாற்றினர். பயிர்க்காப்பீடு குறித்த விரிவுரையும், கலந்துரையாடலும் இடம்பெற்றன. புதிய ரகங்கள், உற்பத்திப் பொருட்கள், மருந்துப் பொருட்கள், பூச்சிக்கொல்லிகள் இடம்பெற்ற 44 காட்சிக் கூடங்கள் கண்காட்சியில் இடம்பெற்றன. மொத்தம் 1300 விவசாயிகள் பயன்பெற்றனர்.

## தேசியப் பயிற்சி



சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடைச் சிகிச்சை, நன்னெறி மற்றும் சட்டவியல் துறையும், ஆசிரியர் உயர் பயிற்சி மையமும் இணைந்து "பண்ணை மற்றும் உடன் விலங்கு மருத்துவத்தில் இமேஜிங் மற்றும் எண்டோஸ்கோபியின் அடிப்படைகள் மற்றும் பயிற்சி" குறித்த 21 நாள் தேசியப் பயிற்சியை 07.07.2016 முதல் 27.07.2016 வரை நடத்தின. நாடு முழுவதிலும் உள்ள மாநில வேளாண்மைப் பல்கலைக்கழகங்கள் மற்றும் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழக நிலையங்களின் 16 அறிவியலாளர்கள் பயிற்சியில் பங்கேற்றனர். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் பயிற்சியின் நிறைவு விழாவில் பங்கேற்றுச் சான்றிதழ்கள் வழங்கி நிறைவுரை ஆற்றினார். ஆசிரியர் உயர் பயிற்சி மைய இயக்குநர் மற்றும் கால்நடைச் சிகிச்சை, நன்னெறி மற்றும் சட்டவியல் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் எஸ். பிரதாபன் அவர்கள் பயிற்சி

அறிக்கை சமர்ப்பித்தார். சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் சி. பாலச்சந்திரன் மற்றும் பல்கலைக்கழகச் சிகிச்சையியல் இயக்குநர் முனைவர் ஆர். ஜெயபிரகாஷ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

## புலிகள் பாதுகாப்புத் தினம், 2016




சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் வனவிலங்கு அறிவியல் துறையின் வனவிலங்கு மன்றம்மூலம் புலிகள் பாதுகாப்புத் தினம் 29.07.2016அன்று கொண்டாடப்பட்டது. வனவிலங்கு மன்றத்தின் துணைத் தலைவர் மற்றும் வனவிலங்கு அறிவியல் துறையின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் எஸ். பிரதாபன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். கல்லூரி முதல்வர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். வினவிலங்கு மன்றத்தின் தலைவர் மற்றும் அடிப்படை அறிவியல் புல முதல்வர் முனைவர் கா. குமணன் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்து, பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்குச் சான்றிதழ் வழங்கி உரையாற்றினார். தமிழ்ப் பேச்சு, கருத்துப் படம் வரைதல், ஓவியம் தீட்டுதல் போட்டிகளில் முறையே இளநிலைப் பட்ட மாணவர்கள் செல்வன் எஸ். அலிமுதீன், செல்வி பி. பிரதிக்ஷா மற்றும் செல்வி கே.ஆர். பொன்சிவசங்கரி ஆகியோர் முதல் பரிசு வென்றனர். நிகழ்ச்சியின் இறுதியில் புலிகள் பாதுகாப்புத் தின உறுதிமொழி எடுத்துக்கொள்ளப்பட்டது.

## அசைபோடும் பிராணிகளுக்கான சிகிச்சை பற்றிய பயிற்சி

மலேசியப் புத்திரா பல்கலைக்கழகத்தைச் சார்ந்த இரு மாணவிகளுக்கு அசை போடும் பிராணிகளின் சிகிச்சை குறித்த பயிற்சி 18.07.2016 முதல் 30.07.2016வரை நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் அளிக்கப்பட்டது. கால்நடை மருத்துவச் சிகிச்சை கற்பிக்கும் வளாகத்தின் பல்வேறு பிரிவுகள் மற்றும் அவசரச் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைகள் பற்றிய பயிற்சிகள் அளிக்கப்பட்டன. கால்நடைச் சிகிச்சைத் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் இரா. இசக்கியல் நெப்போலியன் அவர்கள் பயிற்சியை ஒருங்கிணைத்து நடத்தினார்.

## செயல்முறைக் கற்றல் பயிற்சியின் இலாபத் தொகை அளிப்பு

நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இளநிலைப் பட்ட மூன்றாமாண்டு (2013–2014ஆம் பிரிவு) மாணவர்கள் செயல்முறைக் கற்றல் திட்டத்தின்கீழ் வணிகரீதியிலான வெண்பன்றி வளர்ப்பு மற்றும் தீவனத் தயாரிப்புத் தொழில்நுட்பம் குறித்த செய்முறைப் பயிற்சி பெற்றனர். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் வெண்பன்றி வளர்ப்பு மற்றும் தீவனத் தயாரிப்புத் தொழில்நுட்பம்மூலம்



கிடைத்த இலாபத்தில் 50 விழுக்காட்டை மாணவர்களுக்கு 08.07.2016அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார். மேலும், மாணவர்களின் முயற்சிகளைப் பாராட்டினார்.

## பயிற்சி

- நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடைப் பராமரிப்பு விரிவாக்கக் கல்வித் துறைமூலம் கிராமத் தத்தெடுப்புத் திட்டத்தின் கீழ் "நாட்டுக் கோழி வளர்ப்பு மற்றும் வெண்பன்றி வளர்ப்பு" குறித்த இரு நாள் பயிற்சி 25.07.2016 மற்றும் 26.07.2016ஆம் தேதிகளில்




  நடைபெற்றது. பயிற்சிமூலம் தென்புறநாடு கிராமப் பஞ்சாயத்தின் 25 மலைவாழ் மக்கள் பயன்பெற்றனர்.
- கரூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்மூலம் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் ஊரகத் தொழில் முனைவோர் பயிற்சி மையத்தின்நிதியுதவியுடன் ஆறுநாள்சுயவேலைவாய்ப்புப் பயிற்சி 25.07.2016 முதல் 30.07.2016 வரை நடத்தப்பட்டது. பயிற்சியில் கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த 7 பெண்கள் உட்பட மொத்தம் 30 பண்ணையாளர்கள் பயன்பெற்றனர். தமிழக அரசின் கோழி வளர்ப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் 26 பயனாளிகளுக்கு 20.07.2016 முதல் 22.07.2016 வரை "நாட்டுக்கோழி வளர்ப்பு" பயிற்சியும், ஆத்மா திட்டத்தின் கீழ் வளையப்பட்டி கிராமத்தின் 18 பண்ணை மகளிர் உட்பட 40 பண்ணையாளர்களுக்கு "நாட்டுக்கோழி வளர்ப்பு" குறித்த புற வளாகப் பயிற்சியும் நடத்தப்பட்டன.
- திருச்சிராப்பள்ளி, கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்மூலம் "நாட்டுக்கோழி வளர்ப்பு" குறித்த பயிற்சி, 12.07.2016 மற்றும் 13.07.2016ஆம் தேதிகளில் நடைபெற்றன. பயிற்சிமூலம் 111 பண்ணையாளர்கள் பயன்பெற்றனர். திருச்சிராப்பள்ளி பிரிவு, துணைத் தலைமை ஆய்வாளர் (சிறைத்துறை) திருமதி பி. ஜெயபாரதி அவர்கள் 13.07.2016அன்று நடைபெற்ற நிறைவு விழாவில் பங்கேற்று, சான்றிதழ்கள் வழங்கினார்.

## அக்ரி இண்டெக்ஸ் –2016 கண்காட்சி



கோயம்புத்தூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம், நாமக்கல், வேளாண் அறிவியல் நிலையம், பல்கலைக்கழக ஆராய்ச்சிப் பண்ணை, ஈரோடு மற்றும் திருப்பூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள் ஆகியவை இணைந்து பல்கலைக்கழகத்தின் சார்பில் கோயம்புத்தூர் கொடிசியா தொழில் கண்காட்சி வளாகத்தில் 15.07.2016 முதல் 18.07.2016வரை நடைபெற்ற அக்ரி இன்டெக்ஸ் – 2016 கண்காட்சியில் பங்கேற்றன. பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பங்கள், விளக்கப்படங்கள், புகைப்படங்கள், வெளியீடுகள், குறுந்தகடுகள், தனுவாஸ் தாதுஉப்புக் கலவை, தாதுஉப்புக் கட்டி, தீவனப் பயிர்கள், காய்கறி மற்றும் தீவனப் பயிர் விதைகள் ஆகியவை கண்காட்சியில் வைக்கப்பட்டு, பல்கலைக்கழகத்தின் செயல்பாடுகளும் சாதனைகளும் விவசாயிகளுக்கு விளக்கப்பட்டன. மேலும், பல்கலைக்கழகம் வெளியிட்ட பல்வேறு தொழில்நுட்பங்கள் மற்றும் குறைந்த விலையிலான கால்நடை மற்றும் கோழிகளுக்கான பண்ணைக் கருவிகள் விவசாயிகளுக்குச் செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டு, அவர்களின் சந்தேகங்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது. பல்வேறு கால்நடை வளர்ப்பு முறைகள் குறித்த மடிப்பிதழ்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. பல்கலைக் கழகத்தின் தனுவாஸ் தாது உப்புக் கலவை, உப்புக்கட்டி, குறுந்தகடுகள், தீவனப் பயிர் விதைகள் மற்றும் பல்கலைக்கழக வெளியீடுகள் விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்டன. கண்காட்சிக்குச் சுமார் 1.50 இலட்சம் விவசாயிகள் வருகை புரிந்தனர். மேலும், சுமார் 1100 விவசாயிகள் கால்நடைப் பல்கலைக்கழக அரங்கில் பதிவு செய்தனர்.

## விவசாயக் கண்காட்சி 2016இல் பங்கேற்பு

வேலூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி தினமலர் நாளிதழ் வேலூரில் 22.07.2016முதல் 25.07.2016வரை நடத்திய தினமலர் வேளாண் கண்காட்சி 2016இல் பங்கேற்று, பல்கலைக்கழகத்தின் பணிகள் மற்றும் கறவை மாடு வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, கால்நடை இனங்கள் மற்றும் பசுந்தீவன வகைகள் குறித்த தொழில்நுட்பங்களைக் காட்சிக்கு வைத்தது. மேலும், தனுவாஸ் தாது உப்புக் கலவை, புத்தகங்கள் மற்றும் வீடியோ பாடங்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டன. 25.07.2016அன்று நடைபெற்ற நிறைவு விழாவில் "சிறந்த அரங்க" விருது, தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் டாக்டர் எம். பாஸ்கரன் அவர்களால் பல்கலைக்கழகத்திற்கு அளிக்கப்பட்டது. 1,30,000க்கும் மேற்பட்ட விவசாயிகள் மற்றும் தொழில்முனைவோர்கள் பல்கலைக்கழக அரங்கைப் பார்வையிட்டனர்.

## புதிய நிதியுதவித் திட்டங்கள்

தேசிய வேளாண் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மொத்த நிதி ரூபாய் 629.91 லட்சத்தில் "தமிழ்நாட்டின் கற்பிக்கும் கால்நடை மருத்துவமனைகளில் நோய்கண்டறியும் உபகரணங்களை வலுப்படுத்தல்(ரூபாய் 325.50 லட்சம்)", "நீடித்த கால்நடை வளர்ப்பிற்குப் பண்ணைக் கருவிகள்/சாதனங்கள் உருவாக்கப் புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் கருவிமயமாக்கல் மையத்தை ஏற்படுத்தல்(ரூபாய் 150.41 லட்சம்)", "கால்நடைத் தடய அறிவியல் ஆய்வகத்தை ஏற்படுத்தல்(ரூபாய் 154 லட்சம்)" ஆகிய மூன்று புதிய நிதியுதவித் திட்டங்கள், 2016–17ஆம் ஆண்டில் பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ளன.

## விழிப்புணர்வு நிகழ்ச்சி மற்றும் மருத்துவ முகாம்

திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் பணியாளர் மன்றம்மூலம் மருத்துவக் காப்பீடு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி மற்றும் இலவச மருத்துவ முகாம் 21.07.2016அன்று நடைபெற்றது. கல்லூரி முதல்வர் மற்றும் பணியாளர் மன்றத் தலைவர் முனைவர் எம். திருநாவுக்கரசு அவர்கள் மருத்துவ முகாமைத் துவக்கிவைத்தார். திருநெல்வேலி, ஸ்டார் ஹெல்த் மற்றும் அலைடு இன்சூரன்ஸ் கம்பெனியின் முதுநிலைக் கிளை மேலாளர் திரு. ராஜ்குமார் மற்றும் அஞ்சலக உதவிக் கண்காணிப்பாளர் திரு. ஜி. செந்தில்குமார் ஆகியோர் மருத்துவக் காப்பீட்டின் முக்கியத்துவம் குறித்து உரையாற்றினர். மருத்துவ முகாமில் மேலப்பாளையம், செல்வன் மருத்துவமனைமூலம் இலவச உடல் பரிசோதனையும் நீரிழிவு நோய்க்கான ஆலோசனையும், வாசன் கண் மற்றும் பல் மருத்துவமனைமூலம் இலவச கண் மற்றும் பல் பரிசோதனையும், பாளையங்கோட்டை ராக் மருத்துவமனைமூலம் சிறப்பு எலும்புப் பரிசோதனையும் செய்யப்பட்டன. முகாமில் 130க்கும் மேற்பட்ட ஆசிரியர் மற்றும் பணியாளர்கள் பங்கேற்றுப் பயன்பெற்றனர்.

## அப்துல் கலாம் விருது



நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இரு மாணவர்கள் செல்வன்

**Registered with Registrar of Newspapers for India No.TN TAM/2001/5254**
**Posted at Pathrika Channel, Egmore RMS, Chennai - 8.**

**Licensed to post without prepayment No.TN/PMG/(CCR)/WPP-708/15-17**
**Registration No.TN/TBM/32/2015-17**

Posted on 29.08.2016 at Pathrika channel, EGMORE, RMS
Date of publication : 25th and 26th of every month

Printed and Published by
Dr. S.A. Asokan, Ph.D., Director of Distance Education
on behalf of Tamil Nadu Veterinary and Animal Sciences University
and Printed at University Publication Division, Madhavaram Milk Colony,
Mathur Road, Ambathur Taluk, Tiruvallur District, Chennai - 600 051
**Editor : Dr. S.A. Asokan,** M.V.Sc., Ph.D., **Phone : 044-2432 0411**
**E-mail : dde@tanuvas.org.in**

ஏ. ஜெயகிருஷ்ணன், செல்வன் பி. முரளி கிருஷ்ணா ஆகியோர்க்குப் பல்கலைக்கழகத்தின் கால்நடை உற்பத்திக் கல்வி மைய இயக்குநர் முனைவர் வெ. ரமேஷ் சரவண குமார் அவர்கள் வழிகாட்டுதலில் “கோழிக் கழிவுகளிலிருந்து மின் உற்பத்தி” குறித்த திட்டத்தை நிறைவேற்றியதற்காக “அப்துல் கலாம் விருது” வழங்கப்பட்டது. இதற்கான சான்றிதழ் மற்றும் விருதுகளைக் கல்லூரி முதல்வர் முனைவர் இல. குணசீலன் அவர்கள் வழங்கினார்.

### புதிய நிதி அலுவலர்



தமிழ்நாடு அரசின் நிதித் துறை இணைச் செயலர் திரு. க. வேல்முருகன் அவர்கள் பல்கலைக்கழகத்தின் நிதி அலுவலராக 11.07.2016அன்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

### இரத்த வகை கண்டறிதல் முகாம்

ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் நாட்டு நலப்பணித் திட்டத்தின் சார்பாக இரத்த வகை கண்டறிதல் முகாம் கோவிலூர் கிராமத்தில் 21.07.2016அன்று நடத்தப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர் க.ந.செல்வக்குமார் அவர்கள் முகாமினைத் துவக்கி வைத்தார். உடற்செயலியல் மற்றும் உயிர்வேதியியல் துறையின் இணைப்பேராசிரியர் முனைவர் ச. ஜெயச்சந்திரன் அவர்கள் 87 மாணவர்களுக்கு இரத்த வகை கண்டறிதல் சோதனை செய்தார். நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் முனைவர் வ. ரங்கநாதன் அவர்கள் முகாமை ஒருங்கிணைத்தார்.

### பணி ஓய்வு



சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை உற்பத்திப் பொருட்கள் தொழில்நுட்பத் துறையின் (பால்வள அறிவியல்) பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் சி. நரேஷ்குமார் அவர்கள் 31.07.2016அன்று பணி ஓய்வு பெற்றார். 18.07.1956இல் பிறந்த இவர் 35 ஆண்டும் 06 மாதமும் பணியாற்றியுள்ளார்.



ஓசூர், கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரியின் முதல்வர் முனைவர் ப. முருகானந்தன் அவர்கள் 31.07.2016அன்று பணி ஓய்வு பெற்றார். 01.08.1956இல் பிறந்த இவர் 35 ஆண்டும் 07 மாதமும் பணியாற்றியுள்ளார்.



சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை நோய்த் தடுப்பு மருத்துவத் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் பி.எஸ். திருநாவுக்கரசு அவர்கள் 31.07.2016அன்று பணி ஓய்வு பெற்றார். 30.07.1956இல் பிறந்த இவர் 31 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார்.



சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை உடல் செயலியங்கியல் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் வி.எஸ். கோமதி அவர்கள் 31.07.2016அன்று பணி ஓய்வு பெற்றார். 31.07.1956இல் பிறந்த இவர் 31 ஆண்டும் 06 மாதமும் பணியாற்றியுள்ளார்.



சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை மரபியல் மற்றும் இனப்பெருக்கவியல் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ஏ. சுப்பிரமணியன் அவர்கள் 31.07.2016அன்று பணி ஓய்வு பெற்றார். 04.07.1956இல் பிறந்த இவர் 31 ஆண்டும் 01 மாதமும் பணியாற்றியுள்ளார்.



சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் முதல்வர் அலுவலக உதவியாளர்(முதுநிலை) திருமதி ஜெ. குணாம்மாள் அவர்கள் 31.07.2016அன்று பணி ஓய்வு பெற்றார். 17.07.1958இல் பிறந்த இவர் 34 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார்.



சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை அறுவைச் சிகிச்சை மற்றும் ஊடுகதிரியக்கவியல் துறையின் உடனாள் (முதுநிலை) திரு. ஏ. தனசேகரன் அவர்கள் 31.07.2016அன்று பணி ஓய்வு பெற்றார். 09.07.1958இல் பிறந்த இவர் 34 ஆண்டும் 05 மாதமும் பணியாற்றியுள்ளார்.